**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

Under Section 173 BNSS

C 8167223

1. District : Salem  PS: V & AC  Year: 2024  FIR No.: 10/AC/2024  Date: 28.10.2024
மாவட்டம்  காவல்நிலையம்  ஆண்டு  மு.த.அ. எண்  நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை  23-10-2024 / 10.30 hrs
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை  24.10.2024 / 11-30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.10.2024  Time நேரம் 0700 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.10.2024  Time : நேரம் 0700 hrs

4. Type of Information : Written/ Oral : Oral
தகவலின் வகை : ~~எழுத்து~~ மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Municipal Corporation Hasthampatti Zonal Office, 2 km North-west.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி Hasthampatti, Salem.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :  District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Shaju  (b) Father's/ Husband's Name : Shanmugam
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 35 years  (d) Nationality : Indian  (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு  நாட்டினம்  வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : -  Place of Issue : -
வழங்கப்பட்ட நாள்  வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :  (g) Address : Andichi Nagar, Mittapudhur, Salem.
தொழில்  முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Raja Bill Collector, Municipal Corporation Hasthampatti Zonal Office, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/10/24

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

28/10/2024

Signature of the Officer-in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.10.2024
09.30 hrs.

Name: பெயர் S. Murugan
Rank: நிலை Inspector of Police. No. எண் ..........

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/AC/2024 சட்டப்பிரிவு 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

சேலம் மிட்டாபுதூர் ஆண்டிச்சிநகரை சேர்ந்த சண்முகன் மகன் திரு.ஷாஜு என்பவர் இன்று 28.10.2024ம் தேதி காலை 07.00 மணிக்கு சேலம் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளர் முன்னிலையில் கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு. நான் தற்போது சேலம் மிட்டாபுதூர் ஆண்டிச்சிநகரில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். என்னுடைய சொந்தவூர் கேரளா மாநிலத்திலுள்ள பாலக்காட்டில் உள்ளது. நான் சேலம் புதுபஸ் ஸ்டாண்டு பக்கம் ஹோட்டல் வசந்தம் ரோட்டில் SR Info Solutions என்ற பெயரில் சுமார் 6 வருடமாக கம்ப்யூட்டர் லேப்டாப் சர்வீஸ் சென்டர் வைத்து நடத்திவருகிறேன். சேலம் அழகாபுரம்புதூரில் 1729 சதுர அடிகள் கொண்ட காலி வீட்டுமனையை 20.01.2021ம் தேதியில் என்னுடைய மனைவி ரம்யா பெயரில் விலைக்கு வாங்கினேன். பின்னர், 28.02.2024ம் தேதியில் என்னுடைய புதிய காலிமனைக்கான சொத்துவரி ரூபாய் 6,388/-ஐ சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்தில் செலுத்தினேன். அந்த காலிஇடத்தில் வீடுகட்டும் பணியை துவக்கி தற்போது சுமார் 900 சதுரஅடி அளவில் தரைதளமும் சுமார் 400 சதுர அடி அளவில் முதல் தளமும் கட்டி முடித்துவிட்டேன். தற்போது வீட்டுவரி நிர்ணயம் செய்யவேண்டி 22.10.2024ம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு சென்று என்னுடைய புதிய வீட்டிற்கு வரிநிர்ணயம் செய்வது குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது, பில்கலக்டர் ராஜா என்பவரை பார்க்குமாறு சொன்னார்கள். நான் விசாரித்து பின்னர், அந்த அலுவலகத்திலிருந்த பில்கலக்டர் ராஜா என்பவரை பார்த்து என்னுடைய புதிய வீடு சம்மந்தப்பட்ட டாகுமெண்ட்டுகளை காண்பித்து, வரி நிர்ணயம் செய்வது குறித்து கேட்டேன். அதற்கு பில்கலக்ட்டர் ராஜா, ஒரு அப்ளிகேஷன் ரெடிபண்ணி போட்டுவிடுவதாக சொல்லி, ரூபாய் 200/-ஐ என்னிடமிருந்து பெற்று, அதனை மாநகாட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீது வாங்கி வைத்துக்கொண்டார். பின்னர், மறுநாள் காலை 10.30 மணிக்கு வீட்டை வந்து பார்ப்பதாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். மறுநாள் 23.10.2024ம் தேதி காலை10.30 மணிக்கு நான் என்னுடைய புதிய வீட்டில் இருந்தபோது, பில்கலக்ட்டர் ராஜா அங்கு வந்து பார்த்துவிட்டு, அளவு எடுத்துக்கொண்டு 6 மாதத்திற்கு

தோராயமாக வீட்டுவரி ரூபாய் 24,000/- வருவதாகவும், தான் அதை ரூபாய் 12,000/- ஆக குறைத்து போட்டுதருவதாகவும் அதற்காக தனக்கு தனியாக ரூபாய் 35,000/-ம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். இல்லையென்றால் வரி நிர்ணயம் செய்துதர முடியாது என்றும், தண்ணீர் இணைப்பு கிடைக்காது என்றும் சொன்னார். நான் தொகை அதிகமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர், ரூபாய் 35,000/-த்தில் 3,000/- குறைத்துக்கொண்டு, ரூபாய் 32,000/- கொடுக்குமாறு கேட்டார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். பின்னர், அவர் என்னை மறுநாள் அவருடைய அலுவலகத்தில் வந்து பார்க்குமாறு சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். நான் மீண்டும் 24.10.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த பில்கலக்ட்டர் ராஜா அவர்களை சந்தித்து என்னுடைய புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து கேட்டேன். அப்போது அவர் தான் கேட்ட பணம் ரூபாய் 32,000/- ரெடியா என்று கேட்டார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், தான் கேட்ட பணத்தை கொடுத்தால்தான் புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யமுடியும் என்றும், அப்போதுதான் தண்ணீர் இணைப்பு கிடைக்கும் என்றும் சொன்னார். நான் கொஞ்சம் குறைத்து சொல்லுமாறு கேட்டேன். அதற்கு அவர், தான் ஏற்கனவே கேட்ட ரூபாய் 32,000/-த்தில் 2,000/- குறைத்துக்கொண்டு ரூபாய் 30,000/- அவருக்கு தனியாக கொடுத்தால்தான் என்னுடைய புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யமுடியும், இல்லையென்றால் வரி நிர்ணம் செய்யமுடியாது என்று முடிவாக சொல்லிவிட்டார். அவர் லீவில் செல்வதாகவும், திங்கட்கிழமை பணத்துடன் வந்து அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்தில் தன்னை பார்க்குமாறும் சொன்னார். அதனால் நான் திரும்பி வந்துவிட்டேன். பில்கலெக்ட்டர் ராஜா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து வரி நிர்ணயம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூபாய் 30,000/-த்துடன் சென்று, அவர் சொன்னபடி இன்று அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். படிக்கக்கேட்டேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. sd/-xxxxxxxx (ஷாஜு) 28.10.2024. மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்து, எதிரியின் பொதுப்படையான நற்பெயர் குறித்தும், புகார்தாரரின் முன் நடத்தை பற்றிய விவரங்கள் குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, புகாரின் தன்மை குறித்து திருப்தியடைந்த பிறகு, புகாரின் தன்மைப்படி இன்று 28.10.2024ம் தேதி காலை 09.10 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்

10/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றை ஊழல்தடுப்பு வழக்குகள் விசாரணைக்கான மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம், சேலத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

28/10/2024

Inspr. of Police,

V&AC, Salem.

சேலம் மிட்டாபுதூர் ஆண்டிச்சிநகரை சேர்ந்த சண்முகன் மகன் திரு.S. ஷாஜு என்பவர் இன்று 28.10.2024ம் தேதி காலை 07.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புர் பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் ஆய்வாளர் முன்னிலையில் கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு.

---

நான் தற்போது சேலம் மிட்டாபுதூர் ஆண்டிச்சிநகரில் என் குடும்பத்துடன் குடியிருந்துவருகிறேன். என்னுடைய சொந்தவூர் கேரளா மாநிலத்திலுள்ள பாலக்காட்டில் உள்ளது. நான் சேலம் புதுபஸ் ஸ்டாண்டு பக்கம் ஹோட்டல் வசந்தம் ரோட்டில் SR Info Solutions என்ற பெயரில் சுமார் 6 வருடமாக கம்ப்யூட்டர் லேப்டாப் சர்வீஸ் சென்டர் வைத்து நடத்திவருகிறேன். சேலம் அழகாபுரம்புதூரில் 1729 சதுர அடிகள் கொண்ட காலி வீட்டுமனையை 20.01.2021ம் தேதியில் என்னுடைய மனைவி ரம்யா பெயரில் விலைக்கு வாங்கினேன். பின்னர், 28.02.2024ம் தேதியில் என்னுடைய புதிய காலிமனைக்கான சொத்துவரி ரூபாய் 6,388/-ஐ சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்தில் செலுத்தினேன். அந்த காலிஇடத்தில் வீடுகட்டும் பணியை துவக்கி தற்போது சுமார் 900 சதுரஅடி அளவில் தரைதளமும் சுமார் 400 சதுர அடி அளவில் முதல் தளமும் கட்டி முடித்துவிட்டேன். தற்போது வீட்டுவரி நிர்ணயம் செய்யவேண்டி 22.10.2024ம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு சேலம் அஸ்தம்பட்டியில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு சென்று என்னுடைய புதிய வீட்டிற்கு வரிநிர்ணயம் செய்வது குறித்து அங்கிருந்தவர்களிடம் கேட்டபோது, பில்கலக்டர் ராஜா என்பவரை பார்க்குமாறு சொன்னார்கள். நான் விசாரித்து பின்னர், அந்த அலுவலகத்திலிருந்த பில்கலக்டர் ராஜா என்பவரை பார்த்து என்னுடைய புதிய வீடு சம்மந்தப்பட்ட டாகுமெண்ட்டுகளை காண்பித்து, வரி நிர்ணயம் செய்வது குறித்து கேட்டேன். அதற்கு பில்கலக்ட்டர் ராஜா, ஒரு அப்ளிகேஷன் ரெடிபண்ணி போட்டுவிடுவதாக சொல்லி, ரூபாய் 200/-ஐ என்னிடமிருந்து பெற்று, அதனை மாநகாட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீது வாங்கி வைத்துக்கொண்டார். பின்னர், மறுநாள் காலை 10.30 மணிக்கு வீட்டை வந்து பார்ப்பதாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். மறுநாள் 23.10.2024ம் தேதி காலை10.30 மணிக்கு நான் என்னுடைய புதிய வீட்டில் இருந்தபோது, பில்கலக்ட்டர் ராஜா அங்கு வந்து பார்த்துவிட்டு, அளவு எடுத்துக்கொண்டு 6 மாதத்திற்கு தோராயமாக வீட்டுவரி ரூபாய் 24,000/- வருவதாகவும், தான் அதை ரூபாய் 12,000/- ஆக குறைத்து போட்டுதருவதாகவும் அதற்காக தனக்கு தனியாக ரூபாய் 35,000/-ம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். இல்லையென்றால் வரி நிர்ணயம் செய்துதர

முடியாது என்றும், தண்ணீர் இணைப்பு கிடைக்காது என்றும் சொன்னார். நான் தொகை அதிகமாக உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர், ரூபாய் 35,000/-த்தில் 3,000/- குறைத்துக்கொண்டு, ரூபாய் 32,000/- கொடுக்குமாறு கேட்டார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். பின்னர், அவர் என்னை மறுநாள் அவருடைய அலுவலகத்தில் வந்து பார்க்குமாறு சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். நான் மீண்டும் 24.10.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சேலம் மாநகராட்சியின் அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த பில்கலக்டர் ராஜா அவர்களை சந்தித்து என்னுடைய புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்வது குறித்து கேட்டேன். அப்போது அவர் தான் கேட்ட பணம் ரூபாய் 32,000/- ரெடியா என்று கேட்டார். நான் தற்போது என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், தான் கேட்ட பணத்தை கொடுத்தால்தான் புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யமுடியும் என்றும், அப்போதுதான் தண்ணீர் இணைப்பு கிடைக்கும் என்றும் சொன்னார். நான் கொஞ்சம் குறைத்து சொல்லுமாறு கேட்டேன். அதற்கு அவர், தான் ஏற்கனவே கேட்ட ரூபாய் 32,000/-த்தில் 2,000/- குறைத்துக்கொண்டு ரூபாய் 30,000/- அவருக்கு தனியாக கொடுத்தால்தான் என்னுடைய புதிய வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்யமுடியும், இல்லையென்றால் வரி நிர்ணம் செய்யமுடியாது என்று முடிவாக சொல்லிவிட்டார். அவர் லீவில் செல்வதாகவும், திங்கட்கிழமை பணத்துடன் வந்து அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்தில் தன்னை பார்க்குமாறும் சொன்னார். அதனால் நான் திரும்பி வந்துவிட்டேன். பில்கலெக்ட்டர் ராஜா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து வரி நிர்ணயம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூபாய் 30,000/-த்துடன் சென்று, அவர் சொன்னபடி இன்று அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே, அவர்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். படிக்கக்கேட்டேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது.

[signature] 28/10/24

மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்து எதிரியின் பொதுப்பணியான நற்பெயர் குறித்தும், புகார்தாரரின் முன் நடத்தை பற்றிய விவரங்கள் குறித்தும் ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, புகாரின் தன்மை குறித்து திருப்தி-யடைந்த பிறகு, புகாரின் தன்மைப்படி இன்று 28.10.2024ம் தேதி காலை 09.10 மணிக்கு சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 10/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாக்குமூலம் இணைத்து ஊழல் தடுப்பு வழக்குகள் விசாரணைக்கான மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கிறேன்.

[signature] 28/10/2024
Insp. VAC Salem